C.C 138/18
PW 1
பெயர் சேகர்
தேதி 06.03.2023
(1 எதிரி ஆஜர். 2 ம் எதிரி ஆஜர் இல்லை. 2 ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைத்து உறுதிமொழி எடுத்து 1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் முதல் விசாரணையில் தோட்டத்தில் உள்ள மோட்டார் காணாமல் போனதாக கூறியுள்ளேன். மேற்படி தோட்டம் எனக்கு பாத்தியமா என்றால் நான் குத்தகைக்கு எடுத்து விவசாயம் பார்த்து வருகிறன். பாண்டியராஜ் என்பவரிடமிருந்து குத்தகைக்கு எடுத்துள்ளேன். மேற்படி தோட்டத்தை நான் பாண்டியராஜிடம் இருநது குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்து வருவதாக கூறியுள்ளேன். அதற்குரிய ஆவணம் எதுவும் போலிசாரிடமும, நீதிமன்றத்திலும் கொடுத்தேனா என்றால் இல்லை. காணாமல் போனதாக சொல்லப்படும் மோட்டார் எனக்கு சொந்தமானது அல்ல என்றால் சரிதான். எத்தனை வருடமாக குத்தகைக்கு நான் எடுத்திருந்தேன் என்றால் 2 வருடத்திற்கு எடுத்திருந்தேன். காணாமல் போனதாக சொல்லப்படும் மோட்டார் அந்த தோட்டத்தில் எத்தனை வருடமாக பயன்பாட்டில் இருந்தது என்றால் 3 வருடமாக உள்ளது. மோட்டார் காணாமல் போனதுஎந்த தேதி, மாதம் வருடம் என்பது எனக்கு ஞாபகம் இல்லை. எப்போது புகார் கொடுத்தேன் என்றால் இரவில்மோட்டார் காணாமல் போய்விட்டது மறுநாள் காலையில் புகார் கொடுத்தேன். 22.4.18ம் தேதி மாலை 6மணியிலிருந்து மறுநாள் காலையல் மோட்டார் காணாமல் போனதாக புகாரில் காட்டியுள்ளேன் என்றால் சரிதான். 26.4.18ம் தேதி நான்கு நாட்கள் கழித்து புகார் கொடுத்ததாக கூறியிருந்தால் அது தவறு என்றால் மறுநாள் காலையிலேயே நான் புகார் கொடுத்துவிட்டேன். காணாமல் போன மோட்டாரை நீதிமன்றம் மூலம் பெற்றுக்கொண்டேன். புகார் கொடுக்க நானும், எனது மனைவியும் காவல்நிலையம் சென்றோம். மோட்டார் காணாமல் போனது குறித்து அதன் உரிமையாளரிடம் நான் சொன்னேன். நானும், தோட்டத்தின் உரிமையாளர் பாண்டியராஜனும் சேர்ந்து தான் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்ததாக போலிச் விசாரணையில் கூறியிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல. எனக்கும் மோட்டார் காணாமல் போனதாக சொல்லப்படும் தோட்டத்திற்கும் எவ்வித சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. மோட்டாருக்கு எனக்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் மேற்படி மோட்டாருக்க நா ன் தான் உரிமையாளர் என்று பொய்யான விபரங்களை காட்டி நீதிமன்றத்திலிருந்து மோட்டாரை பெற்றுள்ளேன் என்றால்சரியல்ல. வழக்கு விபரம் தோட்ட உரிமையாளருக்கு தெரியும். தெரியும் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்தார்கள். போலிசார் என்னை 3 முறை விசாரித்தார்கள். என்றைக்கு விசாரித்தார்கள் என்றால் மோட்டார் காணாமல் போன மறுநாள் விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தம் இல்லை என்றாலும் நான் காவல்நிலைய கையிருப்பு சாட்சி என்றால் சரியல்ல. புள்ளிவிபர கணக்கிற்காக போலிசார் பொய்யான வழக்கு தாக்கல் செயதுள்ளார் என்றும் அதில் என்னை புகார்தாரராக சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல.